செ.வெ.எண் :68 நாள்: 26.12.2018

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள சுனாமி நினைவுப் பூங்காவில் 14-ம் ஆண்டு சுனாமி நினைவு தினத்தையொட்டி**

**மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 26.12.2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலையின் 14-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, இன்று (26.12.2018) காலை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள சுனாமி நினைவுப் பூங்காவில் மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப ஆகியோர் பங்கேற்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

ஆழிப் பேரலையில் உயிரிழந்தவர்களுக்கு, சுனாமியால் பெற்றோர்களை இழந்த குழந்தைகள் தங்கி பயிலும் அன்னை சத்யா அரசு குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகள் மெழுகுவர்த்தி ஏந்திட, நாகப்பட்டினம் நகரில் உள்ள கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் அனைவரும் அஞ்சலி செலுத்தினார்கள்.

முன்னதாக சுனாமி பேரலையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், கல்லூரி மாணவ மாணவிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்ற மவுன ஊர்வலம் நாகப்பட்டினம் இ.ஜி.எஸ்.பிள்ளை தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து தொடங்கி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள சுனாமி நினைவுப் பூங்காவினை வந்தடைந்தது.

இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு,எம்.தமிமுன் அன்சாரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.விஜயகுமார்,இ.கா.ப, நாகப்பட்டினம் சார் ஆட்சியர் திரு.கமல்கிஷோர்,இ.ஆ.ப, சிக்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.தங்க.கதிரவன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கண்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், வட்டாட்சியர்(பேரிடர் மேலாண்மை) திரு.தமிமுன் அன்சாரி, நாகப்பட்டினம் வட்டாட்சியர் திரு.பா.இளங்கோவன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**